★ மனித உரிமைகள் மாநாடு: இலங்கைக்கு கதவடைப்பு!

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

விலை ரூபா 5-00

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 பங்குனி 2 இதழ் 33
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 15-3-1994

(புதுடில்லி)

இந்தியாவின் மேற்குப் பகுதியில் நடைபெறும் மனித உரிமைகள் மகாநாட்டில் கலந்து கொள்ள இலங்கைக்கும், பாகிஸ்தானுக்கும் இந்தியா விசா வழங்கவில்லை என்று நேற்று பி. பி. ஸி. தெரிவித்தது.

தெற்கு ஆசியாவிலிருந்து மேற்படி மகாநாட்டில் மனித உரிமைகள் குழுக்களைச் சேர்ந்த 125 பிரதிநிதிகள்

(4-ம் பக்கம் பார்க்க)

நாடாளுமன்றம் மூலம்
ஜனாதிபதி தெரிவானால் சிறுபான்மை பாதிக்கப்படும்

(கொழும்பு)

ஜனாதிபதி நாடாளுமன்றத்தின் மூலம் தெரிவு செய்யப்படடால், சிறுபான்மை இனம் மேலும் புறக்கணிக்கப்படும் என்று அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

நாடாளுமன்றத்தின் மூலம்

(4-ம் பக்கம் பார்க்க)

மன்னாரில் புலிகள் மீளத் தாக்கு

மூன்று பொலிஸார் உயிரிழப்பு

- ஆயுதங்கள் மீட்பு -

(மன்னார்)

மன்னாரில் இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதியில் விடுதலைப்புலிகள் மீண்டும் தாக்குதல் நடாத்தியுள்ளனர். மன்னாரிலுள்ள பொலிஸ் காவலரண் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அதிவேக உக்கிர தாக்குதலில் மூன்று பொலிஸார் கொல்லப்பட்டனர். ஆயுதங்கள் பலவும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

(4-ம் பக்கம் பார்க்க)

இனப்பிரச்னைக்கு தீர்வுகாண அரசு முயன்று வருகிறது
- ஜனாதிபதி

(கொழும்பு)

வடக்கு-கிழக்குப் பிரச்னைக்குத் தீர்வுகாண அரசாங்கம் சகல முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றது. இதற்குப் பொதுமக்களின் பூரண ஒத்துழைப்பும் தமக்கு அவசியம் என ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க தெரிவித்துள்ளதாக தினகரன் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: விடுதலைப் புலிகள் எவ்வளவுதான் போராடினாலும், அவர்களது தமிழீழக் கோரிக்கைக்கு இடமளிக்கமாட்டேன்.

இந்த நாட்டின் இறைமையையும், ஒருமைப்பாட்டையும் பாதுகாப்பதே அரசின் குறிக்கோளாகும்.

(4-ம் பக்கம் பார்க்க)

கோடிக்கணக்கான பணம் போருக்கு செலவாகிறது

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு யுத்தத்திற்கு வருடமொன்றுக்கு கோடிக்கணக்கான ரூபா செலவாகின்றது.

ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

காலி நகரசபையில் இடம்பெற்ற தென் மாகாணசபைத் தேர்தல் பிரசாரக் கூட்டம்

(4ம் பக்கம் பார்க்க)

பூநகரி இராணுவம் மீது கிரனேட் வீச்சு

(கொழும்பு)

பூநகரிப் பகுதியில் படையினரை நோக்கி கடந்த 12ம் திகதி விடுதலைப் புலிகள் கிரனேட் தாக்குதல் நடாத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதலினால் படையினர் தரப்பில் ஏற்பட்ட சேதங்கள் குறித்து எதுவிதத் தகவலும் கிடைக்கவில்லை என்று கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. க-இ

வடக்கு-கிழக்கில்
சிவில் பணிகளை சீரமைக்க உயர் அதிகாரி நியமனம்

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணத்தில் சிவில் நிர்வாக பணிகளை சீரமைக்க வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக உயர்மட்டலுவலகர் மாகாண அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின்பெர்னாண்டோ நியமிக்கப்பட்டுள்ளதாக அரச உயர் வட்டாரங்கள் தெரிவித்தன.

(4ம் பக்கம் பார்க்க)

இனப்பிரச்னை தொடர்பான
தெரிவுக்குழு முடிவு இம்மாதம் வெளிவரும்

(கொழும்பு)

இனப்பிரச்னைக்கு தீர்வுகாணும்முகமாக நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் இறுதி முடிவுகள் இம்மாத கடைசிப் பகுதியில் வெளிவரஇருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

(4-ம் பக்கம் பார்க்க)

கிளாலி-பூநகரி படகுச் சேவை

(யாழ்ப்பாணம்)

கிளாலி - பூநகரி படகுச் சேவை, இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என்று விடுதலைப் புலிகள் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் பின்போடப்பட்டது

(கொழும்பு)

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் குழுக்கூட்டம் அடுத்த வருடத்துக்கு பின்போடப்பட்டுள்ளது. உலக வங்கியே இக்கூட்டத்தை பின்போட்டுள்ளது.

இந்தக் கூட்டம் எதிர்வரும் ஜூன் மாதம் நடைபெறவிருந்தது.

உதவி வழங்கும் நாடுகளின் குழுக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதால் இலங்கையின் பல அபிவிருத்தித் திட்டவேலைகள் பாதிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலித்துறைமுக அபிவிருத்தி வேலைகள், மாத்தறை கதிர்காமம் ரயில் பாதை வேலைகள் போன்ற அபிவிருத்தித்

(4ம் பக்கம் பார்க்க)

வீரச் சாவு

(முல்லைத்தீவு)

மணலாறுப் பகுதியில் கடந்த 12ம் திகதி இரவு ஏற்பட்ட எதிர்பாராத வெடி விபத்தில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி ஒருவர் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

லெப். புஷ்பேந்தி அல்லது சசாம் அல்லது இராசையா இராமச்சந்திரன் — திருமலை என்ற போராளியே வீரச்சாவைத் தழுவிக்கொண்டவராவார். க-இ

லலித்தை புலிகள் கொலைசெய்யவில்லை
- ஸ்ரீமனி அத்துலத் முதலி

(கொழும்பு)

எனது கணவரை விடுதலைப் புலிகள் கொலை செய்யவில்லை என திருமதி அத்துலத் முதலி தென்பகுதி தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் தெரிவித்துள்ளார்.

திருமதி ஸ்ரீமணி அத்துலத் முதலி தென்பகுதி தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் இப்போது ஈடுபட்டுள்ளார்.

காலஞ்சென்ற தமது கணவரான லலித் அத்துலத்முதலியின் கொள்கைகளை அமுல்படுத்த தென்பகுதி மக்கள் தமக்கு உதவவேண்டுமென அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (இ)

சந்திரிகாவின் உயிருக்கு தென்பகுதியில் அச்சுறுத்தல்

(கொழும்பு)

தென்பகுதியில் தமது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாக மேல்மாகாண சபை முதலமைச்சர் திருமதி சந்திரிகா குமாரணதுங்க தெரிவித்துள்ளார்.

இரகசியப்பொலிஸார் மூலம் தமக்கு இத்தகவல் கிடைத்துள்ளதாகவும் இதனைத்தொடர்ந்து கடந்தவாரம் தென்மாகாண தேர்தல் பிரசார விஜயத்தை தான் ஒத்திவைத்து கொழும்பு திரும்பியதாகவும் அவர்

(4ம் பக்கம் பார்க்க)

வரிவிளம்பரம்

செல்வம் ஆட்ஸ்

றபர் சீல் வேலை செய்யத் தெரிந்தவர்களும், பழக ஆர்வமுள்ளவர்களும் நேரில் வரவும். செல்வம் ஆட்ஸ், காங்கேசன்துறை வீதி, சுன்னாகம். (சி-862)

பசன் கன்றுகள் விற்பனைக்கு

ரூபா 10/ மட்டுமே. சொந்த பலவு கன்றுகள் விற்பனைக்கு உள்ளன. Taste Line Industries (P.Vt Ltd. No. 14, Seenier Lane Jaffna.

(எ-3892)

தவறிவிட்டது

சைக்கிள் ஒன்று கஸ்தூரியார் வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். G. V. Kanesalinkam No. 298, K. K. S. Road, Jaffna.

(சி- 883)

பாவித்த, பழைய மணிக்கூடுகளுக்கு புதியன

நல்ல நிலையில் உள்ள பாவித்த மேசை, சுவர் மணிக்கூடுகள், கைக்கடிகாரங்களை உதிரிப்பாகத்திற்காக வாங்கி புதிய மணிக்கூடுகள் குறைந்த விலையில் விற்கப்படும். குறிப்பு: (உதிரிப்பாகத்திற்காக மணிக்கூடுகள் கொண்டு வருபவர்கள் அடையாள அட்டையுடன் வரவும்.) சகல றேடியோக்கள், மணிக்கூடுகள் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். டிக்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி.

(ஏ-3899)

நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

சைவமணி சோ. க. வேலாயுதர் பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி மேல் பாடிய "முருகேசர் வெண்பா" நூல் வெளியீட்டு விழா கோயில் கொடியேற்ற தினமான 17ம் திகதி வியாழக்கிழமை மு. ப. 11 மணிக்கு மேற்படி ஆலயத்தில் பண்ணாகம் ஸ்ரீ முருகன் இந்து சமய விருத்திச் சங்கத்தினால் நடாத்தப்படும்.

பரீட்சையில் சித்தி

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணத்தில் குடும்ப நல சேவையாளர் பயிற்சிப் பரீட்சையில் 27 பேர்கள் சித்தி அடைந்துள்ளனர்.

தெல்லிப்பழை பிராந்திய பயிற்சி நிலையத்தால் நடாத்தப்பட்ட இப்பரீட்சைக்கு 32 பேர் தோற்றினர் என அறிய வருகின்றது. -154

விவசாய கடன்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் 1994 ம் வருடத்திற்கான விவசாயக் கடன் வழங்கும் திட்டத்தின் கீழ் விவசாய செய்கையில் ஈடுபட்டுவரும் சங்க உறுப்பினர்களுக்கு கடன் மீளளிப்பு நிதியிலிருந்து விவசாயக்கடன் வழங்கப்படவுள்ளது.

இக்கடனைப் பெறவிரும்பும் விவசாயத்தில் ஈடுபடும் சங்க உறுப்பினர்கள் தத்தமது கிளைகளுக்கு ஊடாக விண்ணப்பிக்கவேண்டும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (72)

இவ் வருடத்திற்கான ஊழியர் தொகை மதிப்பீடு

(பண்டத்தரிப்பு)

இவ்வருடத்தில் (1994) மேற்கொள்ளப்படும் அரச, பொதுத்துறை சார்ந்த நிறுவனங்களில் கடமையாற்றும் ஊழியர்களின் தொகை மதிப்பு எடுக்கும் திட்டத்தின்கீழ் யாழ். சுகாதார திணைக்களத்தில் கடமையாற்றும் ஊழியர்களின் சுயவிபரங்கள் பற்றிய விபரங்கள் சேகரிக்கப்பட்டு வருகிறது.

தொகை மதிப்பு, புள்ளிவிபர திணைக்களத்தினால் வழங்கப்பட்ட இதற்கான படிவத்தில் ஒவ்வொரு ஊழியரது சம்பளம், பிறந்த திகதி, முகவரி, வீட்டிலிருந்து வேலை செய்யும் இடத்திற்கும் இடையிலான தூர விபரம், என்ன வாகனத்தில் பிரயாணம் செய்வது போன்ற பலவேறு சுய விபரங்கள் கேட்கப்பட்டுள்ளன.

(72-சி)

இடம் பெயர்ந்தோருக்கு லாம்புகள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

ஜேர்மன் சமஷ்டிக் குடியரசின் புனர்வாழ்வுத் திட்டத்தின்கீழ் இடம்பெயர்ந்தோர் குடும்பங்களுக்கு அறவழிப் போராட்டக் குழுவினால் லாம்புகள் வழங்கும் வைபவம் இன்று 15-ந் திகதி செவ்வாய்க்கிழமை அறவழிப் பயிலகத்தில் நடைபெறவிருக்கிறது.

இவ்வைபவத்தில் பிரதம விருந்தினராக வைத்திய கலாநிதி து. வி. ஜெயகுலராஜாவும், முதன்மை விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலர் திரு. பு. சுந்தரம்பிள்ளையும், சிறப்பு விருந்தினராக டாக்டர் பே. பிலிப்ஸ், திரு. த. நவரத்தினராசா ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். —சி

சிறுவர் நிறை வாழ்வு இல்ல விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

லயன்ஸ் கழக யாழ் வலயம் ஒன்றின் தலைவர் லயன். எஸ். இராஜேஸ்வரனால் ஒழுங்கு செய்யப்பட்டு நேற்று திருநெல்வேலி சிறுவர் நிறை வாழ்வு இல்லத்திலுள்ள பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கிடையில் விளையாட்டுப்போட்டியும் பரிசளிப்பு வைபவமும் நடாத்தப்பட்டது.

இவ்வைபவத்தின்போது இல்லத்திலுள்ள 120 பிள்ளைகளுக்கும் 125 ரூபா பெறுமதியான பாடசாலை உபகரணங்கள் அடங்கிய அன்பளிப்பு பொதியும் வழங்கப்பட்டது.

அத்தோடு விழாவில் பங்குகொண்டு லயன்ஸ் கழக, லியோ கழக உறுப்பினர்களுக்கும், இல்லச் சிறுவர்களுக்கும், மதிய போசனமும் வழங்கப்பட்டது. லயன்ஸ் கழக யாழ். வலயம் ஒன்றின் சேவைத்திட்டத்தின் ஒரு பகுதியாக 20,000 ரூபா செலவில் சிறுவர் இல்லத்தில் திருத்தவேலைகள் செய்து முடிக்கப்பட்டுள்ளது. -சி

தமிழீழ நீதிமன்றில்....

கடை உடைத்து கொள்ளை; 900 ரூபா அபராதம்

(உடுவில்)

சங்கானையில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச்சங்க கிளைக் கடையொன்றின் கதவுகளை உடைத்து முப்பது லீற்றர் மண்ணெண்ணெய் திருடிய நபருக்கு சுன்னாகம் மாவட்ட தமிழீழ நீதிமன்ற நீதியாளர் செல்வி எழில்மதி தொள்ளாயிரம் ரூபா அபராதம் விதித்தார். சங்கானை காவல்துறையினர் வழக்கினை நெறிப்படுத்தினர்.

அனுமதியின்றி இறைச்சி விற்பனை

ஊரெழுவிலுள்ள மாட்டிறைச்சிக்கடை உரிமையாளர் ஒருவர் சுகாதார பரிசோதகரின் அனுமதி முத்திரையின்றி மாட்டிறைச்சி விற்றமைக்காக சுன்னாகம் மாவட்ட நீதியாளர் செல்வி எழில்மதி கடை உரிமையாளரை எச்சரிக்கை செய்ததோடு எழுநூறுரூபா அபராதமும் விதித்தார்.

கோடா உற்பத்திக்கு அபராதம்

180 லீற்றர் கோடா உற்பத்தி செய்த ஏழாலைதெற்கு மயிலங்காட்டைச்சேர்ந்த பெண்ணொருவருக்கு 75,000 ரூபாவை. சுன்னாகம் மாவட்ட நீதியாளர் செல்வி எழில்மதி அபராதமாக விதித்தார்.

இதேபோன்று இரண்டு போத்தல் கசிப்புவைத்திருந்தமைக்காக ஏழாலைகிழக்கைச் சேர்ந்த பெண்ணொருவருக்கு 20,000ரூபா அபராதம் அல்லது ஐந்து மாத கடூழிய சமூக சேவைக்கும், இரண்டரை போத்தல் கசிப்பு விற்பனை செய்த கோண்டாவில் பாரதி வீதியைச் சேர்ந்தபெண்ணொருவருக்கு 23,000 ரூபா அபராதம் அல்லது ஆறுமாத கடூழிய சமூகசேவை புரியவும் உத்தரவிட்டனர். -91சி

உ
சிவமயம்

மெய்கண்ட தேவர் ஆதீனம்

யாழ்ப்பாணம்
தினசரி சிவ. ஞான இலவச சேவை பிற்பகலில்
5, கலைப்புலவர் வீதி
திருவாசக மன்றத்தில் நிகழும்.
ஏனைய நேரங்களில் யாழ். இந்து மைதானச் சந்தி
480, கஸ்தூரியார் வீதி,
ஆதீன ஞான நிலையத்தில் நிகழும்.
"அரன் நாமமே சூழ்க வையகமும்.
துயர் தீர்கவே!"
(சி-885)

அடுப்பு மூட்டிய பெண் தீயின் பிடியில் சிக்கினார்

(யாழ்ப்பாணம்)

தேனீர் வைப்பதற்காக அடுப்பை மூட்டியவேளை தீ பற்றிப்பிடித்ததில் இளம் குடும்பப்பெண் ஒருவர் உடல் பூராவும் எரிகாயங்களுக்குள்ளாகி யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்வேளை அவரது குடிசையும் தீப்பிடித்து முற்றாக எரிந்தது.

நேற்றுக்காலை மாதகலில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் மாவிட்டபுரத்திலிருந்து இடம்பெயர்ந்து வந்து வசிக்கும் இராசலிங்கம் வனிதா (வயது 25) என்ற பெண்ணே எரிகாயங்களுக்குள்ளானவராவார். -சி

வதிவிட வேளாண்மை போட்டி பார்வையிடல்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் நடாத்தப்பட்டுவரும் மூன்றாவது வதிவிட வேளாண்மைப் போட்டியின் முதலாம் கட்ட பார்வையிடல் நடவடிக்கை இம்மாதம் 10ம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

போட்டியாளரின் வதிவிடங்களுக்கு நேரில் சென்று பார்வையிட்டு மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படும் இந்த நடவடிக்கையானது எதிர்வரும் 20ம் திகதிவரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. -சி

'பாட்டா' நிறுவனம் நடத்தும் சர்வதேச கிரிக்கெட் போட்டி

(புதுடில்லி)

பிரபல பாதணி நிறுவனமான 'பாட்டா' இந்த வருடத்தில் சர்வதேச கிரிக்கெட் போட்டி ஒன்றை நடாத்தவுள்ளது.

இந்தப்போட்டித் தொடரில் சில உலக அளவில் சிறந்த துடுப்பாட்டக்காரர், சிறந்த பந்து வீச்சாளர், சிறந்த சகல துறை ஆட்டக்காரர்களையும் தெரிவுசெய்யவுள்ளது.

இந்த கிரிக்கெட்போட்டியை நடாத்தித் தருமாறு பாட்டா நிறுவனம் விடுத்த அழைப்பை ஏற்று முன்னாள் இந்திய கிரிக்கெட் அணி தலைவர் சுனில் கவஸ்கார் இதற்கானஏற்பாடுகளை மேற்கொண்டு வருகிறார். இவ்வருட நடுப்பகுதியில் இப்போட்டித்தொடர் ஆரம்பமாகும். -சி

சமய அறிவுப் போட்டி பரிசு பெற்றோர் விபரம்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை ஆத்திப்புலம் அருள்மிகு ஸ்ரீ சந்திரசேகர விநாயகர் ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு கொழும்புத்துறை சனசமூக நிலையத்தின் ஆதரவுடன் நடாத்தப்பட்ட சமய அறிவுப் போட்டியில் பின்வரும் மாணவர்கள் பரிசில்களைப் பெறுகின்றனர்.

கீழ்ப்பிரிவு: 1. செல்வி ஞானதர்ஷினி ஸ்ரீஸ்கந்தராசா, 2. செல்வி சிந்துஜா நாகராஜா, 3. செல்வன் செல்வராசா செல்வக்குமார்.

மத்தியபிரிவு: 1. செல்வமலினி செல்லத்துரை, செல்வி சுதர்சினி செந்தில்வாசகனேசன், 3. செல்வி துஷ்யந்தி யோகநாதன்.

மேற்பிரிவு: 1. செல்வன் சண்முகரட்ணம் நிமலநேசன், 2. செல்வி வத்சலா சண்முகரட்ணம், 3. செல்வன் நாகேந்திரம் நவராசஸ்.

இச்சனசமூக நிலையத்தால் நடாத்தப்பட்ட இந்துசமய அறிவுப் போட்டியில் மொத்தம் 85 மாணவ, மாணவிகள் பங்குபற்றினர். —154-சி

இரட்டை சூட்டடுப்பு பாவனை அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

முல்லை, மணலாறு மாவட்டத்தில் பல பகுதிகளிலும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் சக்திப் பகுதியினர் இரட்டைச் சூட்டடுப்புபற்றிய பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

மக்கள் மத்தியில் இரட்டைச் சூட்டடுப்பு பாவனையை அதிகரிக்கச் செய்து விறகுச் சிக்கனத்தை ஏற்படுத்தும்முகமாக முல்லை மாவட்டத்தில் முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், நெடுங்கேணி ஆகிய மாவட்டங்களிலும் குமுழமுனை, செம்மலை, உப்புக்குளம் ஆகிய கிராமங்களிலும்பிரச்சாரக்கூட்டங்கள் நடைபெற்றன.

அவ்வப்பகுதி கிராமிய உற்பத்தி குழுக்களின் வட்டத் தொடர்பாளர்கள் தலைமையில் நடைபெற்ற இப்பிரச்சாரக் கூட்டங்களில் இரட்டைச் சூட்டடுப்பின் பாவனைபற்றியும் நன்மைகள்பற்றியும் விளக்கம் அளிக்கப்பட்டதோடு சக்திப்பகுதியின்செயற்பாடுபற்றியும் விரிவாக எடுத்துக் கூறப்பட்டது. -சி

15,000 ரூபா அன்பளிப்பு

(கொழும்புத்துறை)

கைதடி சைவச் சிறுவர் இல்லத்தின் சிறார்களின் வருங்கால நன்மை கருதி கொடி தின நிகழ்வின்போது கோப்பாய் [illegible] சங்கத்தின் தலைவர் திரு. எஸ். பாலசுந்தரம் பதினைந்தாயிரம் ரூபாவை அன்பளிப்பாக இந்துசமயப் பேரவைத் தலைவர் திரு. நா. முத்தையாவிடம் கையளித்தார்.

இக்கொடிதின ஆரம்ப நன்நாளில் பல அன்பர்கள் மனமுவந்து வாரி வழங்கியமை பாராட்டுக்குரிய விடயம் என பேரவைத் தலைவர் ஆத்மஜோதி நா. முத்தையா வாழ்த்தியுள்ளார். —154

இலட்சார்ச்சனை

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் தில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில் பங்குனி உத்தர இலட்சார்ச்சனையும், விசேட திரவ்விய ஹோமமும் 17-ந் திகதி வியாழன் ஆரம்பமாகி பத்து தினங்கள் நடைபெறும். தினமும் மாலை 4 மணிக்கு அபிஷேக ஆராதனையும் இலட்சார்ச்சனையும் சமய சொற்பொழிவும் நடைபெறும்.

ழ்ப்பாணம்

மணிவாக்கு

வாழ்க்கை ஒரு போர்க்களம், அதில் சிக்கனமாக இருத்தல் என்பது பாதி வெற்றிக்குச் சமன்.
- சதே

நமது நோக்கு

புதியன புனைவோமே!

தமிழகத்தின் மின்சாரத் தேவையின் ஒரு பகுதியைப் பெறுவதற்கு கடலிலிருந்து மின் உற்பத்தி செய்யும் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. உலகிலேயே முதல் முறையான இத்திட்டத்திற்கு அமெரிக்க உதவி பெறுவதற்கான ஒப்பந்தம் எழுதப்பட்டதாகச் செய்தி வந்துள்ளது.

எமது பகுதி மின்சாரத் தேவைக்கு தெற்கைத் தான் முற்று முழுதாக நம்பி இருக்க வேண்டுமா?

தமிழக முயற்சி வெற்றியளித்தால், நாம் பின்பற்றக்கூடிய முன்னுதாரணமாக அமையுமல்லவா?

அதுமாத்திரமல்ல, ஆகாயத் தாமரையிலிருந்து 'கசோலின்' என்ற மலிவான எரிபொருளைப் பெறலாம் என விஞ்ஞானிகள் இந்திய ஆய்வு நிலையங்களில் கண்டறிந்துள்ளனர். பெருமளவில் உற்பத்தி செய்வதற்கான இரு வழிமுறைகளையும் வடிவமைத்துள்ளனர்.

மனிதனுக்குத் தேவையான பொருட்களை ஆக்கிவிட, தட்டுப்பாடான பொருள்களுக்கு மாற்றீடுகளைப் பெற்றுவிட அறிவியல் துணைபுரிந்து வருகிறது.

இரண்டாவது உலகப் போரின்போது, இறப்பரை பாதுகாப்பாக இறக்குமதி செய்ய முடியாத நிலை; குறுகிய காலத்தில் பெருமளவு உற்பத்தி செய்ய முடியாத நிலை. எப்படிச் சமாளித்தார்கள்?

செயற்கை இரப்பரையே இரசாயன ஆய்வு கூடத்தில் கண்டுபிடித்து, உற்பத்திக்கு வழிவகுத்தார்கள் அறிவியலாளர்கள்!

நம்மை நசுக்கி, நலிய வைத்துப் பணியவைக்கும் முயற்சிகள் பகிரங்கமாகவே நடக்கின்றன.

இந்த நெருக்கடி வேளையில், நாட்டுக்கு உதவாத ஏட்டுக் கல்வியிலேயே, மாணவர் நாட்டத்தை ஒருமுகப்படுத்தாது, புதியன புனையக்கூடிய அறிவியல் ஆற்றலை வளர்த்திட முனைய வேண்டாமோ?

ஆகாயத் தாமரையிலிருந்து எரிபொருள் பெறுவதெப்படி என்பதை, தமிழகத்திலே உள்ள பாடசாலையின் பொருட்காட்சியிலேயே விளக்கியிருக்கிறார்கள்.

இங்கு, ஆசிரியர்கள் குறிப்பேட்டிலிருந்து மாணவர் குறிப்பேடுகளுக்கு மாற்றிப் பின் பரீட்சை விடைத்தாள்களுக்கு அதனைப் பதிய வைக்கும் இயந்திரங்களாக மாணவர் இருக்கலாமா?

இந்தப் பின்னணியில்தான், தமிழீழ விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் அறிவியற் கழக அமைப்பு வரவேற்கப்பட வேண்டியதாகும். அது அறிவியற் செயற்பாட்டினைத் தூண்டும் என நம்புகிறோம்!

யுத்தத்திற்கான நாட்கள் நெருங்கிக் கொண்டிருக்கிறது

-இளம்பரிதி உரை

(யாழ்ப்பாணம்)

யுத்தத்திற்கான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொண்டு அதே வேளை சமாதான சூழல் ஏற்படுவது போன்ற ஒரு மாயையும் மக்கள் மத்தியில் ஏற்படுத்த அரசு பிரசார யுத்தம் ஒன்றை நடாத்தி வருகின்றது.

இவ்வாறு 5 கோட்டங்களிடையே நேற்று முன்தினம் யாழ் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடத்தப்பட்ட 'வலயம் ஒன்றின்' உடற்பயிற்சிப் போட்டி முடிவில் உரையாற்றிய யாழ் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில்; யுத்தத்திற்கான நாட்கள் நெருங்கிக்கொண்டிருக்கிறது. உலக ஏகாதிபத்தியங்களினதும் இலங்கை அரசினதும் நெருக்கடிக்கு மத்தியில் தமிழ் மாணவர்க்கு உடற்பயிற்சி போதிக்கப்பட்டுள்ளது. பாடவிதானத்துடன் மிகுந்த சிரமங்களிற்கு மத்தியில் இவ் உடற்பயிற்சி போதிக்கப்பட்டதானது இப்போராட்ட சூழலில் வரவேற்கத்தக்கதொன்றாகும். இவ் உடற்பயிற்சியின் மூலம் மாணவர்கள் உடல், உளரீதியில் வளர்ச்சியடைகின்றனர். -இ

கிழக்கு மாகாணத்தில் —

சொந்த இடங்களில் அகதிகளை குடியேற்றுமாறு அரசு பணிப்பு

(திருமலை)

இராணுவ நடவடிக்கை காரணமாக கிழக்கில் இடம்பெயர்ந்த தமிழ் மக்களை மிக விரைவாக அவர்களை சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்துமாறு அரசின் உயர்மட்டம் புனர்வாழ்வு அமைச்சை பணித்துள்ளது.

இராணுவத்தினர் பாதுகாப்பான இடமென உறுதிப்படுத்திய இடங்களில் இடம்பெயர்ந்த மக்கள் மீளக் குடியேற விரும்பாவிடின் அவர்களை பலவந்தமாக குடியேற்ற முடியாதென 'ரேபிறா' என்ற அமைப்பு கூறியுள்ளது.

திருமலையில் 27 அகதிமுகாம்களில் 4,477 குடும்பங்களும் உறவினர்கள், நண்பர்கள் வீடுகளில் 3,292 குடும்பங்களும் தங்கியுள்ளன. மட்டக்களப்பில் 18 அகதிமுகாம்களில் 1,177 குடும்பங்களும் உறவினர் நண்பர்கள் வீடுகளில் 1,210 குடும்பங்களும் அம்பாறையில் 11 அகதிமுகாம்களில் 1,308 குடும்பங்களும் உறவினர் நண்பர்கள் வீடுகளில் 878 குடும்பங்களும் தங்கியுள்ளன. -இ

இரு யூத அமைப்புகளிற்கு இஸ்ரேல் அரசு தடை

(ஜெருசலேம்)

இஸ்ரேல் அரசு இரு தீவிரவாத யூத அமைப்புகளை தடை செய்துள்ளது. இஸ்ரேலிய அமைச்சரவை நேற்று முன்தினம் இந்த முடிவை எடுத்தது.

ஹெப்ரோன் பள்ளிவாசலில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவங்களையடுத்தே இஸ்ரேலிய அரசு 'ஹாப்', 'கஹானா' ஆகிய இருயூதத் தீவிரவாத அமைப்புகளை தடை செய்தது.

ஹெப்ரோன் பள்ளிவாசல் படுகொலைச் சம்பவத்தில் ஈடுபட்ட யூதக் குடியேற்றவாதி 'ஹாப்' அமைப்பைச்சேர்ந்தவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. -இ

எலிகளினால் கொடிய நோய் பரவும் அபாயம்

(கொழும்பு)

குளங்கள், ஆறுகள் போன்றவற்றின் அருகில் நிரந்தரமாக குடியிருப்பவர்களுக்கு எலிகளினால் கொடிய வியாதிகள் தற்போது பரவி வருவதை, சுகாதாரப் பகுதியினர் கண்டுபிடித்து எச்சரிக்கை செய்துள்ளனர்.

எலிகளின் சிறுநீர் குளங்கள், ஆறுகளிலுள்ள நீருடன் தினமும் கலப்பதினால் இந்தத் தண்ணீரைப் பாவிக்கும் பொதுமக்களுக்கு புதுவிதமான கொடிய வியாதிகள் ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

உடம்பில் சிரங்கு, சொறி அல்லது காயம் உள்ளவர்களுக்கு இந்த நீரில் குளிப்பதினால் நாளடைவில் ஏற்புவலி ஏற்பட்டு மரணம் சம்பவிக்கின்றது. இலங்கையில் இந்நோயினால் இதுவரையும் ஐம்பது பேர் உயிரிழந்துள்ளனர் -வி-வி

கோழித் திருடனை மடக்கிப் பிடித்த பெண்

(மானிப்பாய்)

நவாலியில் பகல்வேளையில் கோழிகள் திருடமுயன்றவர், இளம் பெண் ஒருவரினால் மடக்கிப்பிடிக்கப்பட்டு தமிழீழ விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டார்.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.30 மணியளவில் வாலிபர் ஒருவர் நவாலி சின்னப்பா வீதியில் சில நிமிட நேரம் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடித் திரிந்ததை அவ்வீதியில் வசிக்கும் இளம்பெண்மணி ஒருவர் தமது வீட்டிலிருந்தவாறே அவதானித்தபடி இருந்தார். சிறிது நேரத்தால் அவ்வாலிபர் தமது காற்சட்டைப் பையினுள் வைத்திருந்த பாண் துண்டுகளை எடுத்து வீதியில் நின்றவாறே வேலிக்கு மேலால் அப் பெண்ணின்வீட்டுக் கோழிகளுக்கு போட்டவாறு நின்றார்.

இதனைக் கவனித்த அவ் இளம் பெண் ஏற்கனவே தமது கோழிகள் பல களவு போனதைக் கருத்தில் கொண்டு பதுங்கிப் பதுங்கி இளைஞரின் பின்பக்கமாக வந்து அவரின் சேட்கொலரைப் பற்றிப் பிடித்தவாறு கள்வன், கள்வன் என சத்தமிட்டு ஊரவரை அழைத்து விசாரித்தபோது பகல்வேளையில் தாம் இவ்வாறு பல கோழிகளை பிடித்ததாக ஒப்புக்கொண்டார். இதனைத் தொடர்ந்து அவ்வாலிபர் விடுதலைப் புலிகளின் ஆனைக்கோட்டைப் பொறுப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டார். திருடனைப்பிடித்த இளம்பெண்ணின் துணிச்சலை இப் பகுதி மக்கள் பாராட்டியுள்ளனர்.

(71 இ)

வனமின்றிப் போனால் - நம் இனமின்றிப் போகும்

இராசி பலன்

15 - 03 - 1994

செவ்வாய்க்கிழமை

(தமிழுக்கு மாசி 02)

திருதியை மு. இ. 6-50 வரை, அச்சுவினி முழுவதும், அமிர்தயோகம் இராகுகாலம் மாலை 3-21 முதல் 4-51 வரை சுபநேரம் காலை 10-51 முதல் 12-21 வரை.

மேஷம்: தொழில் தந்திரோபாயம், தெய்வசக்தி, வீண் பேச்சு.

இடபம்: உணர்ச்சிவசப்படல், கடன்பளு, குடும்ப கவலை.

மிதுனம்: குறுக்கு வழி நாடல், பெரியோர் சகாயம், தெய்வசிந்தனை.

கடகம்: ஜனவசியம், பணப் புழக்கம், நினைத்ததைச் சாதித்தல்.

சிம்மம்: வம்பு தும்பு, மனம் கோணல், அலைச்சல்.

கன்னி: அநாவசிய பயம், சம்பத்தி தகராறு, குடும்ப விரிசல்.

துலாம்: பரந்த நோக்கு, பிரச்சினைகளை சமாளித்தல், காரியசித்தி.

விருச்சிகம்- விரோதிகளை ஜெயித்தல், மனமாற்றம், தொழில் லாபம்.

தனுசு: தொழில் முரண்பாடு, பழைய கடன்தொல்லை மனவேதனை.

மகரம்: மனச் சஞ்சலம், காரியதடை, நண்பர் வருகை.

கும்பம்: பொதுப் பிரச்சினை, இறை நம்பிக்கை, பயண நன்மை.

மீனம்: வீட்டில் தொல்லை, சகோதர உதவி, எதிர்பாராத சந்திப்பு.

— ஜோஸ்யர்.

உற்சவம்

(யாழ்ப்பாணம்)

இணுவில் அருள்மிகு சிவகாமி அம்மன் கோவில் வருடாந்த மகோற்சவம் நாளை புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. 25ம் திகதி வெள்ளிக்கிழமை சப்பறத் திருவிழாவும், 26ம் திகதி தேர்த் திருவிழாவும் இடம்பெறும். -ம

இன்று

(கொழும்புத்துறை)

தென்மட்டுவில் வேரக்கேணி அருள்மிகு ஸ்ரீ கந்தசுவாமி திருக்கோவிலில் 10 தினங்கள் இடம்பெற்றுவரும் இலட்சார்ச்சனை பூர்த்தி நிகழ்வு நவகுண்டசங்கம் மஹாசங்காபிஷேகம், விசேடபூஜை ஆராதனை வழிபாடு இன்று செவ்வாய்க்கிழமை காலை 7மணி முதல் இடம்பெறும். -154

மருந்து விநியோகம்

(பண்டத்தரிப்பு

மானிப்பாயில் இயங்கிவரும் தெல்லிப்பழை அரசினர் மாவட்ட வைத்தியசாலைக்கு கடந்த வாரம் கப்பல் மூலம் கொண்டு வரப்பட்ட மருந்து வகைகளிலிருந்து ஒரு குறிப்பிட்ட அளவு மருந்துவகைகள் வழங்கப்பட்டுள்ளன. இதனை அடுத்து தற்போது அந்த ரோட்டை சனசமூக நிலையத்தில் நடைபெற்றுவரும் கிளினிக்குகளில் நிலவிய மருந்து தட்டுப்பாடு நீங்கிவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது. -72

175-வது ஆண்டு நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டு175வது ஆண்டுகள் நிறைவுபெறுவதையொட்டிய நிகழ்வும் சிறப்பு மலர் வெளியீடு இன்று செவ்வாய் நண்பகல் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. நிகழ்வுக்கு கல்லூரி அதிபர் நா. க. சண்முகநாதபிள்ளை தலைமைதாங்குவதுடன் மலரை முன்னாள் துணை அதிபர் வே. ஐயாத்துரை வெளியிட்டுவைப்பார். ஆரம்பவுரையை பேராசிரியர் வீ. தயரத்தினராசாவும் விளக்கவுரையை மா. மாணிக்கவாசகரும் நிகழ்த்துவர். -எஸ்

தவக்கால நற்சிந்தனை

"தூயதோர் உள்ளத்தை இறைவா, நீ என்னகத்தே உருவாக்கும்"

(சங். 50:10 அ)

இறைவன் விரும்புவது தூய்மை. இதயத்தூய்மை, வாய்மையில் தூய்மை, வாக்கில் தூய்மை, வாழ்வில் தூய்மை. தூய உள்ளத்தினால்தான் நாம் இறைவனைக் காணலாம். தூய்மை அற்ற மனதோடு நாம் இறைவனைக் காண முடியாது. எனவே தூய உள்ளத்தை முன்னதாக அவரிடம் வேண்டுவோம்.

-ஜோ. தா,

சுவீடன் பெண் ஒரே சூலில் 15 பிள்ளைகளை பெற்றார்

(லண்டன்)

சுவீடனைச் சேர்ந்த திருமதி கிறிஸ்ரின் சொறென்சன் (34 வயது) என்ற பெண் ஒருவர் ஒரே சூலில் 15 குழந்தைகளைப் பெற்று உலக சாதனை நிகழ்த்தியுள்ளார்.

திருமணமாகி பத்து ஆண்டுகள் பிள்ளைப்பேறின்றி வேதனையுடன் வாழ்ந்துவந்த இந்தப் பெண் தமது முதலாவது குழந்தைப்பேறின்போது ஒரே சூலில் 11 ஆண் குழந்தைகளையும், 4 பெண் குழந்தைகளையும் பெற்றெடுத்தார்.

15 குழந்தைகளும் ஒன்று முதல் மூன்று இறாத்தல் எடையுள்ளனவாக பிறந்தபோதிலும் அனைத்து குழந்தைகளும் நல்ல ஆரோக்கியத்துடன் இருப்பதாக டாக்டர்கள் தெரிவித்துள்ளனர். —154-இ

போலி பிறப்புச் சான்றிதழ் அச்சிடும்நிலையம் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

போலியான பிறப்புச் சான்றிதழ்கள், சாரதி அனுமதிப் பத்திரம் ஆகியவற்றை அச்சிட்டதாகக் கருதப்படும் அச்சுக் கூடம் ஒன்றை பாணந்துறைப் பொலிசார் கண்டுபிடித்து சீல்வைத்துள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முஸ்லிம்களின் பெயரில் அச்சிடப்படும் இச்சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்கள் விடுதலைப் புலிகளுக்கு அனுப்பப்பட்டிருக்கலாம் என பொலிசார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக பாணந்துறைப் பொலிசார் மற்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் இணைந்து தீவிர புலன் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ - இ)

தென் மாகாண சபைத் தேர்தல்:

பொதுசனஐக்கியமுன்னணி வெற்றி பெறும்

- அமரசிறி தொடங்கொட

(கொழும்பு)

பொதுசன ஐக்கிய முன்னணி தென் மாகாண சபைத்தேர்தலில் 30 ஆயிரம் அதிகப்படியான வாக்குகளால் வெற்றி பெறும்.

தென்மாகாண சபையின் வேட்பாளர் திரு. அமரசிறி தொடங்கொட இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தென்மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய முன்னணி வெற்றிபெறும் என இரகசிய பொலிஸார் அரசுக்குத் தெரிவித்துள்ளதாக எனக்கு நம்பிக்கையான தகவல்கள் கிடைத்துள்ளன எனவும் திரு. தொடங்கொட தெரிவித்துள்ளார். (இ)

கேரதீவுப் பகுதியில்

இளம் யுவதியின் சடலம்கண்டுபிடிப்பு

(சாவகச்சேரி)

கேரதீவு, பூனேதீவு கடலோரப்பகுதியல் இளம்யுவதி ஒருவரின் சடலம் நேற்று பொதுமக்களால் கண்டெடுக்கப்பட்டு சாவகச்சேரி அரசினர் மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டது.

சுமார் 20 வயது மதிக்கத்தக்க 5 அடி உயரமும் பொது நிறமும் பச்சை நிறசேட்டும் கறுப்பு நிறவுள்ள புள்ளிபாவாடையும் அணிந்துள்ள இவரின் இடதுபக்ககாதில் தோடு ஒன்றும் இடத்தில் இரண்டு துவாரங்களும் காணப்பட்டன.

இவரது வலது பாதத்தின் பின்புறத்தில் அண்மையில் ஏற்பட்ட காயம் ஒன்றும் காணப்பட்டது.

இவரது சடலத்திற்கு அருகில் லேடீஸ் சைக்கிள் ஒன்றும் காணப்பட்டது. சடலம் அடையாளம் காண்பதற்காக சாவகச்சேரி மருத்துவமனையிலிருந்து யாழ். போதனா மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. (155-இ)

சந்திரிகாவின்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து அவரது தனிப்பட்ட பாதுகாப்புமேலும் பலப்படுத்தப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டதையடுத்து திருமதி சந்திரிகா குமாரணதுங்கா மீண்டும் தென்பகுதியில் தேர்தல் சூறாவளிவிஜயத்தை ஆரம்பித்துள்ளார். -இ

உதவி வழங்கும்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திட்டங்கள் இதனால் முக்கியமாக பாதிக்கப்படவுமுள்ளன.

ஏயார் லங்காவின் ஏயார் பஸ் கொள்வனவில் ஏற்பட்ட பிணக்கு காரணமாக இலங்கை அரசுக்குத் தமது எதிர்ப்பைத் தெரிவிக்கும் முகமாகவே உதவி வழங்கும் நாடுகளின் குழுக்கூட்டம் பின்போடப்பட்டுள்ளதாக பொருளாதார வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (இ)

கோடிக்கணக்கான
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றில் பேசிய ஜனாதிபதி மேலும் கூறியதாவது;

வடக்கு-கிழக்குப் பிரச்சனையைத் தீர்க்கமுடியுமானால், யுத்தத்திற்குச் செலவாகும் கோடிக்கணக்கான பணத்தை மீதப்படுத்த முடியும்.

இந்தப் பணத்தை நாட்டின் அபிவிருத்திக்காகவும் இளைஞர்களின் சேமநலன்களுக்காகவும் பயன்படுத்த முடியும் என்றார்.

திரு காமினி திசநாயக்கவும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டார். -இ

நரேமா பயணிகள் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

நரேமா கப்பலில் இன்று பிரயாணம் செய்ய பெயர் பதிந்துள்ள அனைத்து பயணிகளும் நண்பகல் 12 மணிக்கு முன்னர் பருத்தித்துறைக்கு தவறாது சமூகமளிக்குமாறு யாழ். அரச அதிபர் கேட்டுள்ளார். (162-இ

இல்ல மெய்வல்லுனர் போட்டி

(யாழ்ப்பாணம்)

மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி, நாளை புதன்கிழமை பிற்பகல் 1-45 மணிக்கு பாடசாலை விளையாட்டரங்கில் அதிபர் அ. பொ. செல்லையா தலைமையில் நடைபெறும்.

சாவகச்சேரி பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி புஷ்பா கணேசலிங்கம் இவ்வைபவத்தில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்வார். -இ-155

தமிழ்த்துறை ஆய்வரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் ஆய்வரங்கு நாளை புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் பல்கலைக்கழக முகாமைத்துவ மண்டபத்தில் இடம் பெறும்.

யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத்தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும் மேற்படி நிகழ்வில் "1990களில் யாழ்ப்பாண பிரதேசக் கவிதைகள்" என்னும் தலைப்பில் ஆய்வரங்கு இடம் பெறும்.

தமிழ்த்துறை மாணவி செல்வி [illegible] ஆய்வுரையை வழங்குவார். -க-இ

வடக்கு-கிழக்கில்
(1ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. ஒஸ்வின் பெர்னாண்டோ முன்னர், [illegible] அரச அதிபராகக் கடமையாற்றியவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (க-இ)

இனப்பிரச்னைக்கு
(1ம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகளின் பிரச்னை பயங்கரவாதப் பிரச்னையே தவிர இனப் பிரச்னையல்ல. இப்பிரச்னையை இனப் பிரச்னையாக உலகிற்குக் காட்ட விடுதலைப் புலிகள் முற்படுகின்றனர் என்று தெரிவித்துள்ளார். க-இ

மனித உரிமைகள்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கலந்து கொள்கின்றார்கள்.

இந்த மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக இலங்கையும் பாகிஸ்தானும் விண்ணப்பித்திருந்த போதிலும் இறுதி நேரத்தில் இந்த இருநாடுகளுக்கும் இந்திய விசா வழங்கவில்லை என்று பி. பி. ஸி. மேலும் தெரிவித்தது. (வி-இ)

மன்னாரில்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மன்னார் தீவுக்கும் [illegible] இடையில் பிரதான வீதியில் அமைந்திருந்த தொடர் காவலரண்கள் இரண்டின் மீது நேற்று அதிகாலை 12-50 மணியளவில் விடுதலைப் புலிகள் உக்கிர தாக்குதல் தொடுத்தனர்.

சுமார் மூன்று நிமிடங்கள் மட்டும் இத்தாக்குதலானது நீடித்ததாக தெரியவருகிறது.

கடந்த புதன்கிழமை தாராபுரம் பொலிஸ்நிலையம்மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதலில் உயிரிழந்த போராளிகள் நினைவாகவே இத்தாக்குதல் நடாத்தப் பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

தாக்குதல் நடாத்தப்பட்ட வேளையில் படையினரின் காவலரணில் ஒருவர்கூடக் காணப்படவில்லை. மற்றைய காவலரணிலிருந்த 3 பொலிசார் கொல்லப்பட்டனர்.

படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதியில் கடந்த ஒரு வார காலத்திற்குள் நடைபெற்ற மூன்றாவது தாக்குதல் இதுவாகும்.

இத்தாக்குதலின்போது விடுதலைப் புலிகள் தரப்பில் சேதம் எதுவும் ஏற்படவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இத்தாக்குதலின்போது படையினரிடமிருந்து ரி-56ரக துப்பாக்கி-03, அதற்குரிய ரவைக்கூடு-09, மொத்த ரவைகள் 456, ஏ. கே. ரவைக்கூடு தாங்கிகணி-02, ரவைப் பெட்டி-01, ஜே. ஆர். கைக்குண்டுகள்-05 ஆகியன விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டது. -எ-இ

இந்திய பஸ் விபத்தில் 64 பேர் பலி

(புதுடில்லி)

இந்தியாவின் மேற்குப் பகுதியில் பஸ்வண்டி ஒன்று பாலத்தில் இருந்து விலகி ஆற்றில் விழுந்ததில் 64 பேர் உயிரிழந்துள்ளனர். பெண்களும் குழந்தைகளுமே இதில் அதிகளவில் பயணம் செய்தனர்.

50 பேரின் சடலங்கள் எடுக்கப் பட்டுள்ளன. தேடுதல் நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறதாம்.

நேற்று இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. (எ)

அநுரா அமைச்சரானதும் பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டன

(கொழும்பு)

உயர் கல்வி அமைச்சராக திரு அநுரா பண்டாரநாயக்கா பொறுப்பேற்ற பின்னர் பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டு விட்டன.

நுவரெலியா மாவட்ட எம். பி. ஆனந்த தசநாயக்கா இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கை போன்ற ஒருசிறிய நாட்டில் கல்விக்கு மூன்று அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

திரு அநுரா பண்டாரநாயக்கா ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து விலகியது பொதுசன ஐக்கிய முன்னணிக்குக் கிடைத்த லாபமாகும் எனவும் திரு. ஆனந்த தசநாயக்க மேலும் தெரிவித்தார். இ

தெற்கில் தேர்தல் பிரசாரம் சூடு பிடித்துவிட்டது

(கொழும்பு)

தென்மாகாணத்தில் தேர்தல் பிரசாரம் சூடு பிடித்துவிட்டது.

அரச தரப்பினரும், எதிரணியினரும் தென்மாகாணத்தில் சூறாவளி விஜயம்செய்து தேர்தல் பிரசார வேலைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அமைச்சர்கள் அனைவரும் தென்மாகாணத்தில் முகாமிட்டுள்ளனர்.

இதேவேளையில் எதிரணிக்கு ஆதரவாக மேல் மாகாண முதலமைச்சர் திருமதி சந்திரிகா குமாரணதுங்க, ஸ்ரீமனி அத்துலத்முதலி மற்றும் எதிரணியைச் சேர்ந்த முக்கிய நாடாளுமன்ற எம்பிகளும் தென்பகுதியில் இப்போது தேர்தல் பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். (இ)

தென்பகுதியில் அரச குண்டர் படை

(கொழும்பு)

தென்மாகாணத்துக்கு அரச தரப்பைச் சேர்ந்த குண்டர் படை சென்றிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

தென்மாகாணத்தில் இது சம்பந்தமான சுவரொட்டிகள் பலஇடங்களிலும் காணப்படுவதாகக் கூறப்படுகிறது.

அரச குண்டர் படையை தாம் வரவேற்பதாக தென்பகுதி மக்கள் கூறுவதாகவும் இந்த சுவரொட்டிகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. -இ

இனப்பிரச்னை
(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி தேர்தல் நடைபெறுவதற்கு முன்பு நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் முடிவுகளை வெளியிட அரசு தற்போது முயற்சிசெய்துவருகின்றது.

பெரும்பான்மை சிங்கள மக்களின் வாக்குகளை ஜனாதிபதி தேர்தலின்போது பெறுவதற்கு ஏற்றவாறே நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் முடிவுகள் பெரும்பாலும்இருக்கும் என்றும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. -வி-இ

நாடாளுமன்றம்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி தெரிவு செய்யப்பட்டால் அவர் சிறுபான்மை மக்களின் அரசியல் தேவை, பிரதேசஅபிவிருத்தி வேலைகளின் கோரிக்கைகள் போன்றவற்றை உதாசீனம் செய்துவிடுவார்.

அத்துடன் சிறுபான்மை இனத்தவர்கள் வாழும் பகுதிகளில் தேர்தல் பிரசாரங்களை மேற்கொள்ள வேண்டிய நிலையும் ஏற்படாது போய்விடும்.

பெரும்பான்மை இனத்தவர்களைக் கொண்ட நாடாளுமன்றத்திலும் சிறுபான்மை இனத்தவர்களான தமிழ், முஸ்லீம் பிரதிநிதிகளின் ஆதரவு அவசியமற்றதாகக் கருதப்பட்டு சிறுபான்மைக் கட்சிகள் புறக்கணிக்கப்படும் ஆபத்தும் ஏற்பட்டுவிடும் என்று அவதானிகள் மேலும் கருத்து வெளியிட்டுள்ளனர். (வி-இ)

காந்தியின் பேத்தி காலமானார்

(புதுடில்லி)

மகாத்மா காந்தியின் மூத்த புதல்வரான ஹரிலாலின் புதல்வியான திருமதி மது பென் சுரந்திரபாய் மசுபாலா நேற்றிரவு [illegible] காலமானார். அவருக்கு வயது 78. -இ

பொறுப்பதிகாரி நியமனம்

(பண்டத்தரிப்பு)

வல்வெட்டித்துறை அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றிய பதிவு செய்யப்பட்ட வைத்திய அதிகாரி டாக்டர் பொ. இராசரத்தினம் அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையின் பொறுப்பதிகாரியாக இம்மாதம் தொடக்கம் நியமிக்கப்பட்டுள்ளார். -72

* * *

(பண்டத்தரிப்பு)

திருகோணமலை மாவட்டத்தில் பதிவுபெற்ற வைத்திய அதிகாரியாக கடமையாற்றிய டாக்டர் ஏ. செல்வநாயகம் இம்மாதம் தொடக்கம் தொல்புரம் அரசினர் மத்திய மருந்துச்சாலையின் பொறுப்பதிகாரியாக நியமனம் பெற்றுள்ளார். -72

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1994ம் ஆண்டு மார்ச் மாதம் 15-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office Sri Lanka under Licence Number B/10336/B